**தலைப்பு 17 – பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பாராளுமன்ற முதல்வரின் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இந்த அறிக்கையில் 1.6.3(அ) மற்றும் 1.6.6(ஆ)(ii) ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட படிவம் ஏசீஏ-5 இன் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகளாக குறிப்பிடப்பட்ட ரூபா 4,542,526 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் முற்பணக் கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட ரூபா 5,256,043 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 2,001,680 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 9,100,000 பெறுமதியான வான் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ-6 படிவத்திலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம் என்பவற்றின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் ஏசீஏ-பி படிவத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களிற்குரிய சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். | வானின் பெறுமதியை உள்ளடக்குவதற்கும் அதன்மூலம் நிதிக்கூற்றுக்களை திருத்துவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ-6 படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கும் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 2019 சனவரி 01 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ-6 படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கும் இடையில் ரூபா 224,229 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ-6 படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 2019 சனவரி 01 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ-6 படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் சமப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் கணனி முறைமையின் குறைபாடு காரணமாக இத் தவறு ஏற்படுகின்றது. அரச கணக்குகள் திணைக்களம் எதிர்காலத்தில் இத் தவறை சீர்செய்வதற்கு இணங்கியிருந்தது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு ரூபா 50,384 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தில் கொள்வனவுப் பெறுமதியாக ரூபா 398,041 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான தகவல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் கணனி முறைமையின் குறைபாடு காரணமாக இத் தவறு ஏற்படுகின்றதுடன் எதிர்காலத்தில் இத் தவறை சீர்செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் தளபாடங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் (ஏசீஏ-6 படிவம்) சொத்து அகற்றல்களின் கீழ் (சொத்து விற்பனைகள்) ரூபா 143,811 பெறுமதி நீக்கப்பட்டிருந்தது. | சரியான தகவல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் கணனி முறைமையின் குறைபாடு காரணமாக இத் தவறு ஏற்படுகின்றதுடன் எதிர்காலத்தில் இத் தவறை சீர்செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

**1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 128,800 தொகையான இடர் கடன் மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டிருந்தது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு சட்டமா அதிபரிற்கு இவ் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கடனை தீர்ப்பனவு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் கடனாளிக்கு அறிவித்திருந்தது. |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் (ஏசீஏ-பி படிவம்) உள்ளடக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பண மீதிகளிற்கும் திறைசேரி முற்பண மீதிகளிற்கும் இடையிலான ரூபா 131,215 வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளிற்காக நிதிக்கூற்றுக்களில் கணக்கிணக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. |

### 1.6.4 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்ட கட்டுநிதிக் கணக்கின் ரூபா 3,034 வேறுபாடொன்று சீராக்கல் கணக்கொன்றின் மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் கணக்கொன்றின் மூலம் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. |

### 1.6.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்று, ஏசீஏ-எவ் படிவத்தில் இடப்பக்க நிரலில் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் எண்ரீதியான பெறுமதிகளை குறிப்பிடுவதற்குப் பதிலாக ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாட்டுப் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் எண்ரீதியான பெறுமதிகள் நிதிச் செயலாற்றல் கூற்றின் இடப்பக்க நிரலில் உள்ளடக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான நிதியேற்பாடுகள் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)(அ) | சிறுசெலவுக் காசு கட்டுநிதி பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 371(2)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் சிறுசெலவுக் காசு கட்டுநிதியை பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| **(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | | |
| (i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை, 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | அலுவலக உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய 5 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களை தவிர்த்து கொவிட்-19 பரவல் அபாயத்தின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவது நடைமுறைச்சாத்தியம் அற்றதாக அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி, 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(1) ஆம் இலக்க | சாதாரண கடமை மணித்தியாலங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கடமைகளிற்கான படிக் கொடுப்பனவுக்கான அடிப்படையொன்றாக நேரம் பயன்படுத்தப்படுவதால் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் உள்வருகை, வெளிச்செல்லல் மற்றும் அலுவலகத்தில் அவர்களின் இருப்பு என்பன எனது தனிப்பட்ட மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன. இப் படிகளின் கொடுப்பனவிற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | அந் நேரங்கள் கைவிரல் அடையாள இயந்திரங்களின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் வரவுப் படி மற்றும் பயன்படுத்தப்படாத விடுமுறை என்பவற்றிற்காக ரூபா 2,114,960 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | அங்கீகாரம் வரவுப் பதிவேடு மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் கடமைகளை பரீட்சிப்பதன் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. |
| (iii) | 2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க சுற்றறிக்கை | 2015 சனவரி 16 தொடக்கம் 2019 நவம்பர் வரை பாராளுமன்ற முதல்வரின் செயலாளரின் இணைப்புச் செயலாளர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி ரூபா 705,411 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்படி பதவிகளில் காணப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் பாராளுமன்ற முதல்வரின் செயலாளரின் இணைப்புச் செயலாளர் பதவிக்கு பிரயோகிக்கக்கூடிய எரிபொருள் எல்லைக்குரித்தான சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி மேலதிகமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் தற்போது 120 லீற்றர் எரிபொருள் மாத்திரமே உரிய உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படுகின்றன என்பது அறிவிக்கப்படுகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் ஒவ்வொரு செலவினத் தலைப்பிற்கும் உரியதாக திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்குதல் வேண்டும். அறிக்கையிடப்பட்டிருக்காத எந்தவொரு கடப்பாடும் பொறுப்பும் முன்னைய ஆண்டின் செலவினமொன்றாக 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது. எனினும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களில் குறிப்பிடப்பட்டிருக்காத ரூபா 18,415 பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ஒவ்வொரு செலவினத் தலைப்பிற்கும் உரியதாக திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்குதல் வேண்டும். | பொறுப்பு பதிவேட்டில் பதிவுகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறிப்பு V மூலம் அப் பெறுமதிகள் வெளிப்படுத்தப்படுதல் தவிர்க்கப்பட்டிருந்தது. |

## 3. மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 37 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 32 ஆகவும் காணப்பட்டன. அற்கிணங்க 05 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.